யாழ்ப்பாணம்

★ ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகா போட்டி?

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 16 இதழ் 47
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 29-3-1994

(லண்டன்)

இலங்கையில் அடுத்து நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில், எதிர்க்கட்சியின் வேட்பாளராக திருமதி சந்திரிகா குமாரணதுங்கவை நிறுத்துவதற்கு எதிர்க்கட்சிகளின் முக்கிய தலைவர்கள் விருப்பம் தெரிவித்ததாக பி. பி. ஸி. நேற்றுத் தெரிவித்தது.

இது பற்றி பி. பி. ஸி. மேலும் தெரிவித்ததாவது: இவ்வருடம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவையே நிறுத்துவதென ஐக்கிய தேசியக் கட்சி முன்னர் முடிவு செய்திருந்தது.

ஆனால் தற்போது நடைபெற்று முடிந்த தென் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வி அடைந்ததை அடுத்து, இக்கட்சி முன்னர் எடுத்த முடிவைத் தற்போது மறுபரிசீலனை செய்யக்கூடும் என்றும் சொல்லும் பிரதான செய்திகள் பலமாக அடிபடுகின்றன.

தென் மாகாணத் தேர்தலில் எதிரணியினர் பெரும் வெற்றி பெறுவதற்கு திரு

(4ம் பக்கம் பார்க்க)

● தேர்தல் முடிவுகளின் பின்

தென் மாகாண மக்கள் மீது

தாக்கு; கொலைப் பயமுறுத்தல்!

சிறிமா பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடு!!

(கொழும்பு)

தென்மாகாணசபைத் தேர்தலின் பின் காலி, மாத்தறை ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பொதுமக்கள் அச்சுறுத்தப்பட்டும் தாக்கப்பட்டும் உள்ளனர். இதனைத் தொடர்ந்து அங்கு கொலைகளும் இடம் பெற்றுள்ளன. எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பொலிஸ் மா அதிபருக்கு இத்தகவலைத் தெரிவித்து நேற்று கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியைச் பெற்றுள்ளதாக திருமதி [illegible] கொள்ளாதபக்கத்தில், தென் சேர்ந்த அதிகாரம் படைத்த டாரநாயக்கா தமது கடிதத் மாகாண மக்கள் சோபிதுக் ஒரு கிலராலும், பொலிஸ் திக் குறிப்பிடுகிளார். குகிளாகி பதிலடி கொடுக்க அதிகாரிகள் கிலராலும் இதனை நடுப்பதற்குஉடனடி முற்பட்டால் நிலைமை இந்தச் சம்பவங்கள் இடம் காண நடவடிக்கைகளை மேற்

(4-ம் பக்கம் பார்க்க)

வயோதிபப் பெண்ணின் கைவிரல்கள் துண்டிப்பு!

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணியை வாக்களித்த வயோதிபப் பெண் ஒருவரின் மூன்று கைவிரல்களை அனந்தநெரியாத கும்பல் ஒன்று துண்டித்துள்ளது.

தென் மாகாணத்திலுள்ள இந்தப் பெண்ணின் வீட்டிற்குள் நேற்று முன்தினம் இரவு இந்தக் கும்பல் நுழைந்து அவரது கைவிரல்களைத் துண்டித்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அரச தரப்பைச் சேர்ந்த ஒருசில அரசியல் வாதிகளும் இனந்தெரியாதோரும் இந்தக் கும்பலில் அடங்கியிருந்ததாக தென்பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

(4ம் பக்கம் பார்க்க)

எதிர்வரும் தேர்தல்களிலும் அரசு வன்முறையில் இறங்கும்

எதிரணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்த வருடத்தில் நடக்கவிருக்கும் தேர்தல்களில் வெற்றிபெறுவதற்காக அரசு பொதுமக்களுக்கு எதிராக அச்சுறுத்தல் நடவடிக்கைகளிலும் பயங்கரவாத செயல்களிலும் ஈடுபடவிருப்பதாக பொதுசன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி. மு. ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

தென்மாகாண சபை தேர்தலில் அரசு தோல்வி கண்டதால் ஆத்திரமடைந்துள்ளது. இதனால் பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

தொண்டா ஆதரவு எதிரணிக்கு கிடைக்கும்?

(கொழும்பு)

இவ்வருடம் நடைபெற விருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஐ. தே. கட்சிக்கு அமைச்சர் தொண்டமான் தனது ஆதரவை வழங்குவாரா என்பது ஒரு கேள்விக்குறியாக இருப்பதாக பி. பி. ஸி. நேற்று தெரிவித்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

அன்னை பூபதி பொது அறிவுதேர்வு

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி நினைவாக பாடசாலைகளில் நடத்தப்படும் பொது அறிவுத்தேர்வு நாளை 30-ம் திகதி பகல் 1-00 மணிக்கு வடக்கு தமிழீழத்தின் நானூறுக்கும் கூடுதலான பாடசாலைகளில் நடைபெற இருக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழ் ஆசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஆசிரியர்களுக்கு நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விபரங்கள் மார்ச் மாதம் 25ம் திகதி அரசகரும மொழி[illegible]யில் பிரசுரமாகி உள்ளதாக [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

அமரசிறியின் பதவிப்பிரமாணம்

(கொழும்பு

தென் மாகாணசபைத் தேர்தலில் பெரும் வெற்றியீட்டிய பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவர் அமரசிறி தொடங்கொட, இம்மாதம் 31ம் திகதி தென் மாகாண சபையின் முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார். -இ

கிளாலி பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

மணலாறில் புலிகள் தாக்கு; இரு சிப்பாய் பலி

(முல்லைத்தீவு)

மணலாறுப் பகுதியில் கடந்த 26ம் திகதி, விடுதலைப் புலிகளும், துணைப் படை வீரர்களும் இணைந்து இராணுவத்தினர் மீது மேற்கொண்ட அதிகாலை உக்கிரத் தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

அன்றைய தினம் இராணுவ முகாமுக்கும், பராக்கிரமபுர இராணுவ முகாமுக்கும் இடையில் அமைந்த காவல் அரணுக்கு 50 வார் தொலைவில் வைத்து விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் சம்பவத்தை இராணுவ வட்டாரங்களும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

171/1, கேரிபடி வீதியில் ஆகிகின்ற திருமூடும் மடத்துக்கு முன்புறமாக வீடு கலவு விற்பனைக்கு உண்டு. விடு முறை தினங்களில் சந்திக்கலாம். (இ 911)

மாவித்த, பழைய மணிக்கூடுகளுக்கு புதியன

நல்ல நிலையில் உள்ள மாவித்த மேசை, சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் உதிரிப்பாகங்களுடன் புதிய மணிக்கூடுகள் குறைந்த விலையில் விற்கப்படும். குறிப்பு: (உதிரிப் பாகத்திற்காக மணிக்கூடுகளை கொண்டுவருபவர்கள் அடையாள அட்டையுடன் வரவும்.) சகல றேடியோக்கள், மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் திருத்தி கொடுக்கப்படும். டிக்கோ வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ராலி வீதி, யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (ஏ-3899)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

விஞ்ஞான பீடம்

1992/93 கல்வியாண்டுக்கான முதலாவது அரையாண்டுப் பரீட்சைகள் 1994 ஏப்பிரலில் நடைபெற வுள்ளன. மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளோர் விண்ணப்பப் படிவங்களை 1994-04-10 திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்கவும்.

பின்வரும் அலகுகளில் பரீட்சை நடைபெறும்.

BTG 11,	BTG 12,
BG 13,	CHG 11,
CG 13,	PHG 11,
PG 13,	CSG 11,
CSG 12,	ZOG 12,
ZOG 11,	ZG 11
MPG 11,	PMG 12,
MAG 11,	AMG 13,
MSG 11,	MSG 12,
STG 11,	
BTG 21,	BTG 24,
BG 22,	CHG 23,
CG 27,	PHG 21,
PG 24,	CSG 21,
CSG 22	
ZOG 21,	ZOG 22,
ZG 21,	MPG 22,
PMG 22,	MAG 22,
AMG 24,	MSG 23,
STG 21,	BTG 31,
BTG 32,	BG 31,
CHG 31,	CG 34,
CG 35,	CS 05,
PHG 33,	PG 34,
CSG 31,	CSG 33,
ZOG 31,	ZOG 32,
ZG 31,	MPG 33,
MPG 32,	PMG 32,
MAG 32,	AMG 32,
MSG 31,	MSG 33,
STG 31,	

பதிவாளர்.

(ஏ-8935)

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

ம.நோ.கூ.ச. மூலம் சைக்கிள் விநியோகிக்க ஏற்பாடு

(சொழுந்துத்துறை)

வரழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்வோர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்மூலம் சொழுந்து பிழிந்து வாதுவவிற் தருவிக்கப்பட்ட 300 சைக்கிள்களும் 50 நீர்இறைக்கும் இயந்திரங்களும் வரிநடை உணவுப் பொருள்களும் விநியோகிக்கப் படவுள்ளன.

இவையனைவரும் வாழ் மாவட்டத்தில் உள்ள 23பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் மூலம் கிளைச்சங்கங்களுக்கும் வழங்கப்படும். இவற்றை விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளுமாறு சமாசத்தலைவர் திரு. ச. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். -154

மாடியிலிருந்து விழுந்து காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் ஐந்துமாடியின் மூன்றாவது மாடியில் இருந்து தவறி விழுந்த பெண் படுகாயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஐந்து மாடியில் வசிக்கும் கே. கௌசிலா (வயது 27) பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

கூலிவிலை

முருகேசு காந்திகேசு வயது 60 உயரம் 5' — 6'' பொது நிறம். அவரான உடலமைப்புக் கொண்டவர். இவர் கடைகளாக பச்சைக்கோடுகள் கிப்ஸ் சாரமும் வெள்ளைநிற சேட்டும் அணிந்திருந்தார். இவர் பற்றிய தகவல் தெரிந்தோர் தயவு செய்து எம்மிடம் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

கா. பாஸ்கரன்

43, 1-ம் குறுக்கு மணிப்புரி, சொழும்புத்துறை.

30/1, சுவாமியார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (இ - 912)

2-வது பிறந்ததின வாழ்த்து

ஸ்ரீரங்கநாதன் சிந்துஜா

கரம்பன் கிழக்கைச் சேர்ந்த ஸ்ரீரங்கநாதன் — குணமாலினி தம்பதிகளின் செல்வப்புதல்வி

★ சிந்துஜா ★

தனது 2-வது பிறந்த நாளை

இன்று (29-3-94) செவ்வாய்க்கிழமை

குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, தங்கை, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமன்மார், அத்தைமார், அண்ணன்மார் சீருங்கிறப்புடன் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

வீ. ஸ்ரீரங்கநாதன்.

37, மாவடி லேன், ஐந்துசந்தி, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். (சி-910)

9வது ஆண்டு நினைவஞ்சலி

சின்னையா மார்க்கண்டு

தோற்றம்: 1926-04-26 மறைவு: 1985-04-08

திதி: 1994-03-29

தங்கள் ஆதரவு சாந்நிதியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, சகோதரன், சகோதரிகள், மருமக்கள், மைத்துனர், மைத்துனிமார்.

பிரதான வீதி, சங்கானை கிழக்கு, சங்கானை. (908)

விநாயகர் புராண கருக்க நூலை அனைவரும் படித்து பயன்பெறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

"திருவருட் சிறப்புமிக்க விநாயகபுராணச் சுருக்க நூலை அனைவரும் படித்துப் பயன் பெறவேண்டும்.

இணுவில் கண்ணகை அம்மன் கோவிலில் இடம்பெற்ற நூல் வெளியீட்டுவிழாவில் நூல் வெளியிட்டு வைத்து உரையாற்றிய வாழ் வலயக் இந்து நாகரீகத்துறைத் தலைவர் கலாநிதி ம. சோபால கிருஷ்ணன் மேற்கண்டவாறு கூறினார்.

தர்மசாதனகுருகுல அதிபர் சிவஸ்ரீ க.ர. மகாதேவக் குருக்கள் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது;

வசதிகள் குறைந்த பண்டைய காலத்திலே நைமிசாரண்யத்திலே முனிவர்கூடி ஒன்று கூடிப் புராணங்களைக் கேட்டார்கள். ஆராய்ந்தார்கள். சூதமாமுனிவர் ஏனை முனிவர்களுக்கு விநாயகரது மகத்துவம் மிக்க வரலாறுகளைக் கூறியதாக அறியப்படுகின்றது. வடமொழியில் அமைந்த இந்நூலைக் கச்சியப்பர் தென்மொழியில் ஆக்கினார். முத்துச்சாமி முதலியார் வசனரூபமாக அமைத்தார். வசனக் கட்டுரைகள் நிறைந்த இந்நூலை மாணவ சமூகம் படித்துப் பயன்பெறும் வகையில் முருகக் கருக்கிக் கந்துவ்வாறு சதுர்த்தி விரதமகிமை வன்னி, விநாயகர் முதலான பத்திரங்களின் பெருமை இவற்றை யெல்லாம் இப்புராணத்தின் மூலம் நாம்அறியமுடிகின்றது. ஆசிரிய வணக்கம் விரிவுரையாளர் திருமதி கமலாதேவி பொன்னம்பலம் வரவேற்புரை நிகழ்த்தினார். இராமநாதன் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி மகிழைநாதராசா திருக்கிற்றம்பலம், வாழ் வளாக முதன்மை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆகியோர் உரையாற்றினார்கள். சபை மாணவர்களின் மண்ணிசைக் கச்சேரியும் இடம்பெற்றது. திரு ந. செல்வநாயகம் நன்றி தெரிவித்தார்.

கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவிட்டபுரி விருத்தி நிலைய பணிமனையில் பேராசிரியர் க. துரைராசாவுக்கு தேனீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் மாவிட்டபுரி விருத்தி நிலையத்தின் பொறுப்பாளர் திருமதி சரோஜா செல்சந்திரன் பேராசிரியர் துரைராசாவின் சேவைகளைப் பாராட்டிவாழ்த்து மடல் மற்றும் கௌரவ விருது வழங்கிக் கௌரவித்தார். - 162

பரிசுத்த வார வழிபாடுகள்

அரியாலை

யாழ். ஆஸ்பத்திரி வீதி புனித அந்தோனியார் ஆலயம் யாழ் புனித மரியாள் பேராலயம் (ஆசனக்கோவில்) ஆகியவற்றில் பரிசுத்த வார வழிபாடுகள் 31திகதி பெரிய வியாழன் முதல் ஆரம்பமாகி அடுத்த மாதம் 3திகதி ஈஸ்டர் ஞாயிறு வரை நடைபெற வுள்ளது. (50)

முதலாம் தவணை பரீட்சை

(உடுவில்)

யாழ்ப்பாண பாடசாலைகளின் இவ்வருடத்துக்கான முதலாம்தவணைப் பரீட்சைகள் இன்று 29-ம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் 5-ம் திகதிவரை நடைபெற உள்ளன.

ஆண்டு 6 தொடக்கம் 11வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கான பொது அறிவுபரீட்சை நாளை 30ம் திகதி பிற்பகல் சகலபாடசாலைகளிலும் நடைபெற உள்ளது. -109

குடிசைகள் கையளிப்பு

(சாவகச்சேரி

ஒப்பரேசன் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின்போது பெற்றோர் பாதிப்புற்ற 44 குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் குடிசைகள் கையளிக்கும் வைபவம் கடந்த 22ம் திகதி செவ்வாய் புலோப்பளையில் நடைபெற்றது.

இவ்விழாவில் தென்மராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த கிளிநொச்சி மகிழன விவசாய ஏற்றுமதியாளர். தமிழீழ தேசிய பொருளாதார தென்மராட்சி அபிவிருத்திக் துணைக் கொறுக்கப் பாளர் திரு. சிவதாசன் ஏற்றுமதியாளர். தொடர்ந்து தமிழீழ அரசியல் துணைப் பொறுப்பாளர் திரு. கலைவாணன் குடிசைகளை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்து உரியவர்களுக்கு கையளித்தார். (155)

ஓய்வூதிய கொடுப்பனவு

(ஆனைப்பந்தி)

வுங்குடுதீவு-நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான மாச்சாத கொடுப்பனவு தற்போது பணமாக வழங்கப்பட்டு வருகிறது. —101

குடும்பஸ்தர் தற்கொலை

(நெல்லியடி)

நன்கு மருந்த குடித்த நிலை குடும்பஸ்தர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை மந்திகை மருத்துவமனையில் மரணமானார்.

மாமுனை செம்பியன் பற்றைச் சேர்ந்தரவீணன் இராசதுரை (வயது 38) என்னும் குடும்பஸ்தரே தற்கொலை செய்தவராவார்.

இது சம்பந்தமான மரண விசாரணை நடவடிக்கை உடுப்பிட்டி பகுதி நீதிபதி மரண விசாரணை அதிகாரி திரு ஜி. நடராஜா தற்கொலையென தீர்ப்பளித்தார். (160)

நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அறிஞர் க. கி. குலரத்தினத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை 30ம்திகதி புதன்கிழமை பி.ப. மூன்று மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலை மண்டபத்தில் நா. கதிரைவேலு தலைமையில் நடைபெறும். எஸ். சிவவிக்கிரராசா நினைவுப்பேருரை நிகழ்த்துவார்.

மரக்கறி விலை வீழ்ச்சி

(உடுவில்)

சுன்னாகம், மருதனாமடம் சந்தைகளுக்கு மரக்கறிகளின் வருகை அதிகரித்துள்ளமையால் அவற்றின் விலையிலும் பெருமளவு வீழ்ச்சிகாணப்படுகிறது.

பயற்றங்காய் 8 ரூபா, போஞ்சி 6 ரூபா, வெண்டிக்காய் 5 ரூபா, பச்சைமிளகாய் 8 ரூபா, தக்காளி 10 ரூபா, கோவா 12 ரூபா கீரை ஒரு ரூபா என ஒரு கிலோவுக்கான விலைவீழ்ச்சி பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. -109

மணிவாக்கு

எவன் தன் சக்திக்குத் தகுந்தகோல்களை மிறப்பாகச் செய்ய முயலுகிறானோ அவனே அறிவாளி.

- தர்மசாஸ்திரம்

நமது நோக்கு

கங்கலின் கதை என்ன?

சீனாவிடமிருந்து ஐந்து போர்க்கப்பல்கள் வாங்கும் திட்டம் கைவிடப்பட்டுவிடுவதாகச் செய்தி வந்துள்ளது. படைபடைத் தளபதி சீனா சென்றுள்ள வேளையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ள தாகக் கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இச்செய்தியின் பின்னணி என்ன? நிதிப்பற்றாக்குறை என்ற காரணம் காட்டப்பட்டிருக்கிறது.

படைபடைத் தளபதி சீனாவிற்குச் செல்லத்திட்டமிட்டபோது நிதிநிலையைப் பற்றி விரக ஆலோசிக்க விரும்பினாரா?

ஐ.தே.க ஆட்சியிலிருந்தபோது 14 ஆயிரம் கோடியாக இருந்த வெளிநாட்டுக்கடன் தற்போது 300 ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளது என்ற இக்கட்டான நிலையை விரக உணரவில்லையா?

இது எதனால் ஏற்பட்டது? வடகிழக்கு மாகாண ஆளுநரே இன்று சுட்டிக் காட்டுவது போல உலகெங்கும் போர்மேகங்கள் அமைதிப் பேச்சுக்களால் விலக்கப்படும் போது இன்று அரசு வருடந்தோறும் 2500 கோடி ரூபாவை யுத்தத்திற்குச் செலவு செய்து வருகின்றது.

கிழக்கெங்கணும் ஆமையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் நடந்த திகில்முகுலுவுக்கு தேர்தல் ஆணையாளரே பட்டவர்த்தனமாகப் அறிக்கை வெளியிட்டுள்ளார். முஸ்லிம்களும் அரச அடாவடித்தனத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதனைச் சுட்டிக்காட்டிய முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப் இந்த அரசுக்கு இஸ்லாமிய நாடுகள் உதவி வழங்குவதை நிறுத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளார். நிதிப்பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும் என அஞ்சியா கப்பல் தீப்பற்ற வைக்கப்படுகிறது?

இதேவேளை இந்திய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் இலங்கை - பாகிஸ்தான் இராணுவ ஒத்துழைப்பு வளர்ந்து வருகிறதென்றும் சீன ஆயுதத்தளபாடங்கள் இலங்கைக்கு வந்து குவிகிறதென்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் - புலிகள் கூட்டு என்ற இலங்கை அரசின் பிரசாரம் எடுபடவில்லை என்பதையும், இந்திய உள்ளிட்ட பாக இலங்கை அரசின்தடவடிக்கைகளைக் கவனிக்கிறது என்பதை இந்த அறிக்கை வெளிக்காட்டவில்லையா? கப்பலின் கதை - பின்னணிகள் பலப்பல!

மலேரியாவை கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைப்பு தேவை

(உடுவில்)

"ஒருகாலத்தில் மலேரியாப் பிரதேசமாக கருதப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தைப் போன்று இன்று யாழ்ப்பாண மாவட்டமும் மலேரியாப் பிரதேசமாக கருதப்படுகின்றது.

மலேரியாவை கட்டுப்படுத்த விரும்பினால் அதன் விளைவு கண் பார்வை அழிவுக்கு வழி வகுக்கும்"

மலேரியா வாரத்தை முன்னிட்டு இறுதிநாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கிய சுன்னாகம் பிரிவு பொதுச்சுகாதார பரிசோதகர் திரு. சே. கிருபாலரராஜா இவ்வாறு கூறினார்.

பொதுச்சுகாதார பிரிவினருடன் இணைந்து வந்தாறுமூலை தமிழ்க்கந்தையா விநாயகர் மாணவர்களின் ஆசிரியர்கள் மலேரியா வாரத்தை கொண்டாடினர்.

அதிபர் க. செல்வக்குமாரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து கூறியதாவது;

1930 ம் ஆண்டில் 80 ஆயிரம் பேரும், 1940 ல் ஒரு லட்சத்துக்கு கூடுதலான மக்களும் நாடுபூராவும் மலேரியாவினால் பீடிக்கப்பட்டனர். மலேரியா தடைமுயற்சியால் 1963 அளவில் மிக மிக குறைந்தளவிலேயே காணப்பட்டது. ஆனால் மக்களின் கவனயீனம் காரணமாக மீண்டும் அதிகரித்து இன்று வந்தாயிரத்துக்கும் அதிகமானோரை இந்நோய் தாக்கியுள்ளது.

எனவே மக்கள் இடம்பெயர்ந்து நெருக்கமாகவாழ்வதுடன் புழுப்புற சூழலை நீர் தேங்கச் செய்து அசுத்தமாகவாழுவது போன்ற நடவடிக்கைகளே நுளம்புபெருக்கத்துக்கும் மலேரியா நோய்க்கும் காரணமாக அமைகின்றன. —109

11,000 சைக்கிள் இலக்கத் தகடு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தினால் 1994ம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டிக்கான இலக்கத்தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஜனவரி மாதத்திலிருந்து இன்று வரை 11,000 இலக்கத்தகடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இப்பொழுது இலக்கத்தகடுகள் பெறுபவர்களின் தொகை நாளொன்றுக்கு 500 முதல் 600 வரையாக உயர்ந்துள்ளது.

துவிச்சக்கரவண்டிகளின் 1994ம் ஆண்டிற்கான இலக்கத்தகடுகள் விநியோகம் எதிர்வரும் 31ம் திகதி வரை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. 162

இரவு நேரத்தில் உருளைக்கிழங்கு திருட்டு

(உடுவில்)

தோட்டத்தில் காவல் புரிந்த தோட்ட உரிமையாளர் உறங்கிவிட்டவேளை பார்த்து ஆறாயிரம் ரூபா பெறுமதியான உருளைக்கிழங்கைக் கிண்டியெடுத்துடன் தோட்டக்காரனின் சைக்கிளையும் கொண்டு திருடர்கள் சென்று விட்டனர்.

இச்சம்பவம் உடுவில் மல்வம் பகுதியிலுள்ள தோட்டமொன்றில் நடைபெற்றது. 4500 ரூபா பெறுமதியான சைக்கிளையும் உருளைக்கிழங்கையும் பறிகொடுத்த தோட்ட உரிமையாளர் சுன்னாகம் காவல்துறையில் புகார் செய்துள்ளார். --109சி

பேராசிரியர் துரைராசாவிற்கு விரைவில் 'மணிவிழா'

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. துரைராசாவிற்கு மணிவிழா கொண்டாடப்படவுள்ளது. கொழும்பில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் மே மாத முதல்வாரத்தில் மணிவிழாவை நடாத்த கம்பன்கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராஜ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தலைவர் திரு ச. க. தனேந்திரன் ஆகியோர் ஒழுங்கினை மேற்கொண்டுள்ளனர்.

விழாமலர் வெளியிடுவதற்கான ஒழுங்குகளை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் பேராசிரியர் க. சண்முகதாஸ் மேற்கொண்டுள்ளார். கடமாநிலை முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரவிங்கம் இவ்விழாவிற்கு தலைமை வகிப்பார். விழாவில் வேதாகமங்கள் ஓதி யாழ்ப்பாணத்தின் பிரபல தாதஸ்வர. தவில் மேதைகள் அனைவரும் பங்கு கொண்டு இவ்விழாவினைச் சிறப்பிக்கவுள்ளார்கள். -வி

சிறுமியை ஏமாற்றி சைக்கிள் வாங்கியவர் காவல்துறையினரால் கைது

(உடுவில்)

வைக்கோல் வாங்கி தருவதாக கூறி சிறுமியொருவரிடம் இருந்து சைக்கிள் வாங்கிய நபர், சைக்கிளுடன் தலைமறைவாகினார்.

சிறுமியின் புகாரைதொடர்ந்து தேடுதலில் ஈடுபட்ட சுன்னாகம் காவல்துறையினர் சந்தேகநபரை சைக்கிளுடன் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி அறியவருவதாவது அழகரத்தினம் விஜயஜெகன்ஜீவி என்ற 12 வயது சிறுமி புன்னாலைக்கட்டுவன் சந்தியில் உள்ள கடையொன்றில் வைக்கோல் வாங்க சென்றபோது அச்சுவேலியை சேர்ந்த ஒருவர் தான்வைக்கோல் வாங்கித்தருவதாக கூறி, சிறுமியிடமிருந்த 9000 ரூபா பெறுமதியான சைக்கிளை வாங்கிக்கொண்டு சென்று விட்டாராம்.

சிறுமியொருத்தி முறைப்பாடு தொடர்ந்து தேடுதல் செய்தகாவல்துறையினர் சந்தேகநபரை சைக்கிளுடன் கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர். -100

வதைபடு நிலையில் விடுபட நாங்கள்
வீட்டினில் தோட்டம் விருப்புடன் செய்வோம்

இன்று

(யாழ்ப்பாணம்)

சோமாஸ்கந்தா ரோ. க. த. க. பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. ரூபாவதிக்கம் தலைமையில் நடைபெறும்.

* *

(வல்வெட்டித்துறை)

சங்கரனை கல்விக்கோட்டத்தரப்தாரிடம் ஒழுக்கங்களுக்கிடையே போட்டி மட்டத்தினான தரப்தாரிடம் சுற்றுப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-30 மணிவரை பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

* *

பக்தி இலக்கத்தைத் தொடக்கிவைத்த வரைகலைமாமணி வர் குருபூசை வழிபாடும் திருவிசைப்பா அருளிய பூந்துருத்தி நாடநம்பி நீலைவும் பேருரையும் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு வாழ் இந்து மைதானச் சந்தியிலுள்ள மெய்கண்டதேவர் ஆதீனத்திலே புராண படனம் பண்ணிசை என்பவற்றுடன் நிகழும். (59)

இராசி பலன்

29-03-1994

செவ்வாக்கிழமை

(தமிழுக்கு பங்குனி 16)

துதியை: பி.ப. 12.54 வரை. திதிரை: மு.ப. 9.13 வரை. இராகுகாலம்: பி.ப. 3.13 முதல் 4 43 வரை சுபநேரம்: காலை 10.43 முதல் 12 13 வரை.

மேடம்: எவரான சந்திப்பு, தொழில் ஆலோசனை.மகிழ்ச்சி

இடபம்: உடல் பலவீனம், சகோதரர் கவலை, ஆரோக்கியம்.

மிதுனம்: கடன்படல், அலைதிவின்மை, கோபவார்த்தை

கடகம்: பெரியோர் சகாயம், பணப்புழக்கம், பாராட்டு.

சிங்கம்: கருத்துவேற்றுமை, தொழில் நஷ்டம், வெறுப்பு.

கன்னி: புதிய ஸ்தானம், தொழில் வாய்ப்பு, நன்மை வருமை.

துலாம்: எதிர்கால துணர், வருவாய் பாதிப்பு, வீண்செச்சரவு

விருச்சிகம்: வாக்குவன்மை. இனசன மகிழ்ச்சி, விருந்தோம்பல்.

தனுசு: எண்ணங்களில் ஈடேறாமை, கற்பனைமிகுதி, சாதனை மரம்: அதிகபேசனை, காரியதடை, வெறுப்பு.

மகரம்: வழிபிறக்கும், குடும்ப மனஸ்தாபம். வைத்திய செலவு.

மீனம்: இலக்கிய உணர்வு, அதிகாரிகள் பாராட்டு, புகழ்

— ஜோஸ்யர்.

மருதடி விநாயகர் கொடியேற்றம்

(உடுவில்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயவருடாந்த மகோற்சவம் இன்று 29ம்திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி நடைபெறஉள்ளது.

ஏப்பிரல் மாதம் 14ம் திகதி வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெற்று விழா நிறைவுபெறும். -109

வீடுகளுக்கு மலத்தியோன்

(நாவலடி)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்றதேர்தல் முகாம் பிரிவிலுள்ள குடிசைகளுக்கு மலத்தியோன் தெளித்து முடிவடைந்ததைத் தொடர்ந்து இப்பகுதியிலுள்ள வீடுகளுக்கு மலத்தியோன் தெளிக்கும் வேலை ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. —163

எண்ணப்பட்ட திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆரியதராவிடபாஷா விருத்தி சங்கத்தின் தமிழ்ப் பிரவேச பண்டிதர் பரீட்சை விண்ணப்ப முடிவு திகதி மே மாதம் 31ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த பொ.த. உயர்தர மாணவர்களுக்கு ஏற்ற விதத்தில் திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின்கீழ் பரீட்சை நடாத்தப்படவுள்ளது. இப்பரீட்சைகளுக்குத்தோற்றிச் சித்திபெய்தும் மாணவர்களுக்கு கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னபூபதி சிரமதானப்பணி

(அரியாலை)

திருவாசகர் அன்னபூபதியின் 6ம் ஆண்டு நினைவாக யாழ்-குடாநாடு எங்கும் சிரமதானப்பணிகள் நடைபெற்று வருகின்றன. யாழ் இராணுவக் தேர்வீடம் அருகிலுள்ள ஆலயச்சுற்றாடல், முல்லைச் சந்தி ஆகிய இடங்கள் சிரமதானப்பணி மூலம் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

யாழ். கிறிஸ்தி பணிமனை யாழ். கோவில்வீதி, தீவக கோட்டப்பணி ஆகியவற்றில் அன்னபூபதி உருவப்படங்கள் வைக்கப்பட்டு தீப, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது வீதி எங்கும் மஞ்சள் கிளி நிறக்கொடிகளை எழிச்சிவசனங்கள் பொறிக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளன. -59

தவக்கால நற்சிந்தனை

"ஆடுகளைக் கொண்டு போகப்படும் சாந்தமான செம்மறியே போல நீ சிலுவையில் அறையப்பட்டுக்கொண்டு செல்லப்படுகின்றாய்!"

யேசுவின் இறுதிவிடுக்கம் எமக்காகவுமே ஏற்கும் பலியிலுமவை மரணம் அவர் மரணத்தின் பொருளை உணர்ந்தோமா? நம்பாவத்தின் வடுக்களை மறந்தோம். பாதகங்களை மறந்தோம். பாடுகளை மறந்தோம். கல்வரிப் வரலாற்றை நாம் ஏற்று அதன்படி வாழவேண்டும்.

"பரமனின் பரம
கெல்லாம்
திருச்சிலுவை வழியே
எவரே"

மோ தா.

மட்டு. சிறையில் 91 தமிழர் சித்திரவதையின் பிடியில்!

(கொழும்பு)

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் 91 தமிழர்கள் பங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுள் ஒன்பது பேர் பெண்கள், பொத்துவில் தபாலதிபரும் இவர்களுள் ஒருவர் எனவும் இவர்கள் அங்கு கடும் சித்திரவதைகளுக்குள்ளாகுவதாகவும் கூறப்படுகிறது.

தம்மிடம் தனிச்சிறைவாசத்தின் ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற பின்பு, தம்மை விடுதலை செய்வதாக ராணுவத்தினர் கூறியபோதும் நாம் இன்னும் விடுதலை செய்யப்படாமல் பெரும் சித்திரவதைகளுக்கு ஆளாகிறோம் என இவர்கள் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு முறையிட்டுள்ளார்கள். (வீ-இ)

அமெரிக்காவில் புயல் 40 பேர் பலி

(நியூயோர்க்)

அமெரிக்காவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள ஐந்து மாநிலங்களில், கடந்த இரு நாட்களாகத் தொடர்ச்சியாக வீசிவரும் புயல் காற்றுக்கு இதுவரை 40 பேர் பலியானதாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பலியானவர்களில் கூடுதலானோர் பெண்களும், குழந்தைகளுமே அடங்குவர். இந்த மாநிலங்களில் போக்குவரத்துகளும், தொலைத் தொடர்புச் சாதனங்களும் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த புயல் காற்று தொடர்பாகவும் வீசுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. வீ-இ

மடையினர் துப்பாக்கிச் சூடு

(அநுராதபுரம்)

நேற்று அதிகாலை 5 மணி முதல் 6 மணிவரை மன்னை தீவு பகுதியிலிருந்து யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி படகுமூலம் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார். இதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வது விடுதிருக்கிறார். நேற்று முன்தினம் இரவும் இப்பகுதிகளில் ஷெல் துப்பாக்கி பிரயோகம் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது. -50-இ

1990-ம் ஆண்டுக்கு முன் சேதமடைந்த வீடுகளுக்கு கொடுப்பனவு வழங்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 1990ம் ஆண்டிற்குமுன் இராணுவ நடவடிக்கைகளால் சேதமாக்கப்பட்டு திருத்தி அமைக்கப்படாத வீடுகளுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. இதற்கென ஐம்பது லக்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் கொழும்பிலிருந்து அறிவித்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னர் இந்தக் கொடுப்பனவுகளை செய்வதற்காக கிபார்சுசெய்யப்பட்டபோதும் நிதி ஒதுக்கப்படாமையினால் அது நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. -162-இ

சுங்க அதிகாரி கொலை வழக்கு: முதலாம் எதிரிக்கு மரண தண்டனை!

(கொழும்பு)

பிரபலம் வாய்ந்த கொலை வழக்கான அமரபால கொலை வழக்கில் முதலாம் எதிரியான புலக்குவிடிய டொன்சனிக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி டி. ஜயசிங்கிரம நேற்று மரணதண்டனைவழங்கி தீர்ப்பளித்தார்.

சுங்க அதிகாரி கொலை

புலனாய்வு பகுதியின் தலைவராக டபிள்யூ. டி. அமரபாலவை 1986ம் ஆண்டு செப்டெம்பர் 1ம் திகதிக்கும் 1987 ம் ஆண்டு பெப்ரவரி மாதத்திற்கும் இடையில் கொலை செய்ததாகவும் அதற்கு சதி செய்ததாகவும் 1ம் எதிரி உட்பட மூவர்மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

1987ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ம் திகதி பி. ஆர். பி. மைதானத்தில் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளையில் திரு. அமரபால சுட்டுக்கொலைப்பட்டார்.

சுமார் 4 மணி நேரம் வழக்கை விசாரணை செய்த நீதிபதி சதி செய்ததற்குச் சாக்கும் கொலைக்குற்றச்சாக்கும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றுக் கருதினார்.

அதிபர்கள் கூட்டம்

(வல்வெட்டித்துறை)

சங்கானைக் கல்விக் கோட்டம் பிரிவைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான முக்கிய கூட்டமொன்று இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 2-50 மணிவரவில் வட்டு இந்துக் கல்லூரியில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ம. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (139-இ)

கரம்பந்தாட்ட போட்டி

(வட்டுக்கோட்டை)

சங்கானைக் கல்விக்கோட்ட மட்டத்திலான கரம்பந்தாட்டப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 4-00 மணியளவில் பண்ணாகம் மெய்கண்டான் ம. வித்தியாலயத்தில் கோட்டப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (139-இ)

முறைசாராக் கல்விக்கென தேசியத் திட்டம்

(கொழும்பு)

முறைசாராக் கல்விக்கான தேசியத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுகின்றது. முறைசாரக் கல்வியைப் பூர்த்தி செய்யாத தேசிய அபிவிருத்தியில் பங்குபற்றச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்தில், இலக்கை கல்வி முன்னேற்றச் சங்கமும், கல்வித்துறை நிபுணர்களும் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அரச நிறுவனங்கள், தொழிற் ஸ்தாபனங்கள் போன்றவற்றின் அனுபவங்களுக், தொழிற் கல்வி, முதியோர் கல்வி உற்பத்தியில் ஈடுபடுவதற்கான திட்டங்கள், சிறிய வர்த்தக முயற்சிகளில் பயிற்சி ஆகியன பாடசாலையை விடுத்தச் செல்லும் மாணவர்களுக்கும் உயர் கல்வியைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கும் இந்த முறைசாராக் கல்வியில் முக்கிய இடம் வழங்கப்படும்.

இது சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று, நேற்று பத்தரமுல்ல மத்திய கல்வி பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. வீ-இ

அரசின் முடிவை எதிர்த்து மட்டு. மாநகரசபை ஊழியர் போராட்டம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாநகரசபை கடந்த மாதம் முதல் மண் முனைப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்படுவதை ஆட்சேபித்து, கல்லடி வழியில் போராட்டம் நடாத்தியபோது தாக மக்கள்கவப்பு மாநகர சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபைக் கட்டடத்தில் இராணுவ அதிகாரிகளின் செயலகங்கள் தற்போது இயங்கி வருவதினால், தமது செயற்பாடுகளைச் சீராகச் செய்யமுடியாது இருப்பதாகவும், இராணுவ அதிகாரிகளின் செயலகங்களை வேறு இடங்களுக்கு மாற்றும்படி பல தடவைகள் அரசுக்கு அறிவுறுத்தியபோதும், அரசு இதுவரை எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

மாறாக, மாநகரசபைக் கட்டடத்தையே மண்முனைக்கு மாற்றும்படி அரசு அறிவித்துள்ளது. அரசின் இச்செயலை எதிர்த்து ஆகிம்சை வழியில் மட்டக்களப்பு மாநகரசபை ஊழியர்கள் அனைவரும் போராட்டம் நடாத்தப்போவதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். வீ-இ

தொண்டா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் தொண்டமானின் இலக்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியில் தற்போது 5 லக்சம் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகள் இருக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் திரு. தொண்டமானின் ஆதரவாக வாலஞ்சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவின் இணைவாக ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றார்.

ஆனால் தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கும் அமைச்சர் தொண்டமானுக்குமிடையில் அடிக்கடி எழுந்த மோதல்கள் ஏற்பட்டு வருவதினால் இம்முறை நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் தோட்ட இலக்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் ஆதரவு ஆளும் ஐ. தே. கட்சிக்கு கிடைக்குமா என்பது ஒரு சந்தேகமாகவே இருப்பதாகவும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

சுன்னை பூபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிமாவட்டங்களுக்கான விருந்தாளிகளும் எழுதுவினாக்களுக் தேர்வு தொடர்பான அறிவுறுத்தல்களும் கடந்த வாரம் அனுப்பி வைக்கப்படுவன. யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கான விருந்தாளிகள் தேர்வு நடைபெறும் நாளன்று காலை கோட்டக் கல்விப் பணிமனைகளினூடாக வழங்கப்பட இருக்கின்றன. தேர்வு அறிவுறுத்தல்களையும் பாடசாலை மாணவர்களின் சுட்டெண்பட்டியலையும் இன்று செவ்வாய்க்கிழமை கல்வி கோட்டங்களில் பெறலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலில் வட தமிழீழத்தில் உள்ள நாநூறுக்கும் கூடுதலான பாடசாலைகளை சேர்ந்த 50,000 திற்குக் கூடுதலான மாணவர்கள் தோற்ற இருக்கின்றனர்.

6, 7, 8, 9, 10, 11, 12-13 ம் ஆண்டு மாணவர்களுக்கு ஏழு பிரிவுகளாக நடைபெறவிருக்கும் இந்தத்தேர்வில் தேசிய மட்டத்தில் கூடுதலான முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டுப் பிரிவுக்கும் முறையே தலா 10, 5, 2 பதக்கங்கள் என்பவை நிதியுதவி நாளன்று வழங்கப்பட இருக்கின்றன. அத்துடன் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கல்விக்கோட்ட மட்டங்களில் பரிசுகளும் தேர்ச்சி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினரால் வழங்கப்பட இருக்கின்றன.

ஸரை கற்றி முற்றுகையிட தீர்மானித்துள்ளதாகவும் திரு. தொண்டமான் தெரிவித்தார். -இ

தேர்தல் முடிவுகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் மோசமடையும்

எனவே பொலிஸார் இந்த விடயத்தில் தலையிட்டு பொதுமக்கள் தாக்கப்படுவதும் கொலை செய்யப்படுவதும் உடன் நிறுத்தப்படவேண்டும் என திருமதி பண்டாரநாயக்கா தனது கருத்தில் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

மணலாறில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 22ம் திகதி இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில், வீரச்சாவைத் தழுவிக்கொண்ட துணைப்படை வீரர்களான லெப். கப்பிரமணியம், 2ம் லெப். செல்வராசா ஆகியோர் நினைவாக இந்தவருடத்தில் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. க-இ

எதிர்வரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீது அது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து அதன் மாதுகாப்பில் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படுகிறது.

இதே காரணியான வன்முறையையும், பயங்கரவாதத்தையும் அரசு எதிர்வரும் தேர்தல்களிலும் எதிரணியின் ஆதரவாளர்கள் மீதுக் கட்டவிழ்த்துவிடலாம் என திரு. ஜயரத்ன பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளையில் தென்பகுதியில் அரசுக்கு பதவியுயர்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களும் அதே வன்முறைகளில் ஈடுபட்டதாக திரு. அமரசிறி தொடர்ந்தும் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கையினால் ஆத்திரமடைந்துள்ள பொதுமக்கள் பொலி

இப்பத்திரிகை "ஈழநாடு" விமிடெட் அதிபரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் திகதி அச்சிடு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B

ஜயோதிபப்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் நடந்து முடிந்த தேர்தலின்போது தென்பகுதி மக்கள் கொடுத்த தீர்ப்பு அரசு தரப்பு ஆதரவாளர்களை ஆதிதிரமடைந்தச் செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதனால் அவர்கள் தென்பகுதியைச் சேர்ந்த பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு அவர்களை சித்திரவதைக்கு உள்ளாக்கிறார்கள் என அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

கடந்தகில நாட்களாக தென்பகுதியில் அமுலபடுத்தப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவைப் பயன்படுத்தி ஒருசில அரசதரப்பு அரசியல்வாதிகள் இனந்தெரியாதவர்களுடன் இணைந்து இந்தத் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்தசில தினங்களாக இரவுவேளைகளில் பொது மக்கள் அங்கு இவர்களால் அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர்.

வாக்களிப்பு நிலையங்களில், பொதுசன ஐக்கிய முன்னணியின் பிரதிநிதிகளாகக் கடமையாற்றியவர்கள் மீது கடந்த சில நாட்களாக இந்தக் குழுக்கள் தாக்குதல்களை நடாத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. -இ

ஸ்ரீ லங்கா அரசாங்கத்தின் அனுமதியுடன் 1986 ஆண்டு ஜூலை மாதம் 1ம் திகதி வெளியிடப்பட்டது.

வெளிச்சம் வெளி வந்தது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் கலை இலக்கிய வெளியீடான 'வெளிச்சம்' மாதாந்த இதழ் (பங்குனி - 1994) நேற்று வெளிவந்தது. இந்த இதழில் தமிழீழத் தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அனைத்துலகப் பெண்கள் தினவிழாவுக்கு வழங்கிய செய்தியுடன் மாவீரர்களின் முன்பக்கக் கவிதையும், பிரம்மஞானி தொடராக எழுதிவரும் 'மனிதனும் வரலாறும்' கட்டுரையும் இடம்பெறுகின்றன.

இவற்றுடன் புதுவை இரத்தினதுரை இளந்திரையன், வைரமுத்து கதிர்காமன், நாக. இளசிதம்பரம், ஆகியோரின் கவிதைகளும், இயல் வாணன், இணுவையூர் பாலா திருச்செந்திநாதன் ஆகியோரின் சிறுகதைகளும், தமிழ் அபிமானியும் எழுத்தாளருமாகிய திரு. நாக. பரிமநாதன் உடனான நேர்காணலும், திரு. சோ. கிருஷ்ணராசா, இலையவன் ஆகியோரின் கட்டுரைகளும் இந்த இதழில் உள்ளன.

தமிழ் ஆசிரியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர் கொழும்பிலிருந்த அறிவித்துள்ளார்.

இந்த வர்த்தமானியை யாழ்ப்பாணத்துக்கு விரைவில் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவருவதாகவும் அவர் அறிவித்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (162-இ)

ஜனாதிபதி

1ம் பக்கத் தொடர்ச்சி

மதி சந்திரா முக்கிய பங்கு வகித்தார். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலிலும் திருமதி சந்திரிகாவையே எதிரணியினரின் வேட்பாளராக நிறுத்துவதற்கு முக்கிய உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இவர்களின் விருப்பத்திற்கு திருமதி சந்திரிகாவின் தாயார் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தமது சம்மதத்தைத் தெரிவிப்பாரா என்பதும் ஒரு கேள்விக்குறியாகவே இருக்கிறது என்றும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. வீ-இ